# குடும்ப நலச் செய்திக் கதிர்

மலர்-9 இதழ்-9

டிசம்பர்-1979

JL
4:52:5m2n
N79.9.5
159885

# குடும்பநலச் செய்திக்கதிர்



மலர். ௯
இதழ். ௯
டிசம்பர். 1979
தமிழ்நாடு குடும்பநலத்துறை வெளியீடு

# சென்னையில் புத்தறிவுப் பயிற்சி முகாம்









1. சென்னை கே. கே. நகர் சிவலிங்கபுரத்தில் இந்திய குடும்ப நலத் திட்ட சென்னை கிளையின் ஆதரவுடன் நடந்த குடும்ப நலப் புத்தறிவுப் பயிற்சி முகாமைத் துவக்கி வைத்து கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் உரையாற்றுகிறார்.

2 முதலமைச்சரின் பேரவைச் செயலாளர் திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் தலைமையுரையாற்றுகிறார்.

3. பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றவர்களில் ஒரு பகுதியினர்.

4. குடும்ப நலக் கண்காட்சியைக் கல்வி அமைச்சர் பார்வையிடுகிறார்.

5. குடும்ப நலத் துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன் சிறப்புரையாற்றுகிறார்.

6. மக்கள் தொகைக் கல்வி தலைவர் திரு. எஸ். வி. நடராஜன்.

7. இந்திய குடும்ப நலத் திட்ட சென்னைக் கிளையின் கௌரவச் செயலாளர் திருமதி ருக்மணி மணி.

8. வரவேற்புரையாற்றிய மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு. எஸ். அப்பர் சுந்தரம்.

9. நன்றியுரையாற்றிய இந்திய குடும்ப நலத் திட்ட சென்னைக் கிளையின் அமைப்புச் செயலாளர் திருமதி கிரிஜா சுவாமிநாதன்.

# தட்டாமலே திறக்கும் கதவு!

## மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். செளந்தரராசன்

மருத்துவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். மருத்துவர்களுக்கு உதவியாக இருப்பவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். சுகாதாரப் பணியாளர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு ஆயிரம் கஷ்டங்கள் நிச்சயமாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு இருக்கின்ற தொல்லைகளை நான் உணருகிறேன். ஆனால் நம்மைப் பொருத்த வரையிலே, சமுதாயத்தில் இருக்கின்ற அடித்தள மக்களுக்காக, அவர்களுடைய குறையைப் போக்குவதற்காக—அவர்களுடைய வேதனையை நீக்குவதற்காக, தட்டாமலே திறக்கின்ற கதவுக்குச் சொந்தக்காரர்களாக—கேட்காமலே கொடுக்கின்ற இதயத்துக்குச் சொந்தக்காரர்களாக நாம் அனைவரும் இருந்தாக வேண்டும்—நல்வாழ்வு, மருத்துவ குடும்பநலத் துறைகளில் பணியாற்றுபவர்கள் இருந்தாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

டாக்டர் ரெங்காச்சாரி அவர்களை ஒரு முறை எண்ணிப் பாருங்கள். எதற்காக அங்கே அவருக்குச் சிலை வைத்திருக்கின்றார்கள். அவரை விடப் பணக்காரர்கள் இந்த நாட்டிலே இருந்து விட முடியுமா? ரோல்ஸ்ராய் காருக்குச் சொந்தக்காரராக இருந்தவர், தனக்காகச் சொந்த விமானத்தையே வைத்திருந்தவர், டாக்டர் ரெங்காச்சாரி அவர்கள். அவருக்கு அங்கே சிலை வைத்திருக்கிறார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது நமக்குத் தெரிகிறது. இரவு இரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டினால்கூடக் கையிலே பெட்டியோடு புறப்பட்டு வருவார் டாக்டர் ரெங்காச்சாரி என்று சொல்லுகிறார்கள். குடிசையில்அழும் சத்தம் கேட்டால் கீழே இறங்கிப் போய் நோயாளியைத் தானே தூக்கி வந்து, காரிலே எடுத்துச் சென்று சிகிச்சை செய்து திருப்பி வீட்டுக்கு அனுப்புவார் என்று சொல்லுகிறார்கள். அப்படிப் பட்டவர்களெல்லாம் மருத்துவத் துறையிலே இருந்திருக்கிறார்கள். டாக்டர் குருசாமி முதலியார் அவர்களை எண்ணிப்



தமிழ நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் திரு. சரண்சிங் அவர்களை, தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். செளந்தரராசன் அவர்களும் மற்றவர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆகவே அரசுப் பணியிலேயிருக்கின்ற மருத்துவர்களும் மற்றவர்களும் அப்படிப்பட்ட கடமை உணர்வைப் பெற்று—நல்ல உள்ளத்தைப் பெற்று நலிந்த மக்கள் நல்வாழ்வு பெறத் தொண்டாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



## கூட்டுறவுத்துறையில் மருத்துவ மனை

கூட்டுறவுத் துறையில் மருத்துவ மனை தொடங்க வேண்டுமென்று டாக்டர் நடராசன் கூறினார்.

இது குறித்து யாருக்கும் ஆட்சேபனை இல்லை.

தமிழக அரசு கண்டிப்பாக இதைச் செய்யும். ஆனால் அங்கே கூட்டுறவு இருக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். மனம் நினைப்பதை, உடல் செயலாக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒத்துழைத்துக் காரியங்களை ஆற்ற வேண்டும்.

—மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள்.

[சென்னை கூட்டுறவு வார விழாவில் ஆற்றிய சிறப்புரையிலிருந்து.]

159885

இந்தத் துறை மிகப் பயங்கரமான துறை என்பது மட்டுமல்ல. மிகமிகக் கவனமாகச் செயல்பட வேண்டிய துறையுமாகும். கொஞ்சம் கவனம் குறையுமானால் இந்தத் துறையிலே எவ்வளவு தவறுகள் நேரும் என்பதற்கு நான் எத்தனையோ எடுத்துக் காட்டுகளைச் சொல்ல முடியும். நேரம் அவ்வளவு இல்லை என்கிற காரணத்தாலே மிகச் சுருக்கமாகவே சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

தவறுகள் ஏற்பட்ட பின்பு மன்னிப்பைக் கேட்டு விடலாம். ஆனால் மன்னிப்புக் கேட்பதனாலே இழந்து விட்ட உயிரைத் திரும்பப் பெற முடியாது என்பதை அனைவரும் உணர்ந்தாக வேண்டும். ஆகவே மருத்துவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். இந்த நாட்டுச் சுகாதாரப் பணியாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். செவிலியர்களைக் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து கடமையிலே கண்ணும் கருத்துமாக இருந்து இந்த அரசுக்கு நல்ல பெயர் வாங்கித் தருவதோடு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் உங்களுக்கென்று நல்லதொரு இடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்—அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென உங்களிடம் சிரம் தாழ்த்தி—கரம் குவித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் பல்வேறு நோய்கள் பல்வேறு முகமாக வந்து கொண்டிருப்பதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். குறிப்பாகச் சின்னக் குழந்தைகளுக்கு தொண்டை அழற்சி என்ற வியாதியும், தெற்கத் திக்கணை என்று சொல்லப்படுகின்ற இசிவுநோயும், உயிருக்கே ஊறுவிளைக்கும் கக்குவான் இருமலும் இன்றைக்கு மிக அதிகமாகக் கிராமப் புறங்களில் வந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்தாக வேண்டும்.

இங்கே ஒரு பட்டியலைப் பார்க்கிறேன். ஆயிரத்துக்கு 124 குழந்தைகள் இந்தியாவிலே சாகிறார்கள். அதே நேரத்தில் தமிழ் நாட்டிலே ஆயிரத்துக்கு 102 குழந்தைகள் சாகிறார்கள். திருச்சியிலே 85.5 குழந்தைகள் சாகின்றன. வளர வேண்டிய சமுதாயம் ஆரம்பத்திலேயே எப்படிப் பட்டுவிடுகிறது என்பதை—மொட்டிலேயே கருகி விடுகிறது என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். பழுத்த பழங்கள் கீழே விழுவதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அரும்பிக் கொண்டிருக்கின்ற அரும்புகள் சிரித்தாக வேண்டும். அந்தச் சிரிப்பிலே இந்த நாடு சிரித்தாக வேண்டும் அந்தச் சிரிப்பிலே இந்த நாடு செழித்தாக வேண்டும்—நாமும் செழித்தாக வேண்டும். ஆகவே அந்தச் சிரிப்பையும் செழிப்பையும் சேர்த்துத் தருவதற்கு நீங்கள் பெற்றிருக்கின்ற பயிற்சியின் துணையோடு, அப்பழுக்கற்ற அரும்பணியாற்றி இத்துறைக்கு வெற்றியை தேடித்தர வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன்.



தமிழ் நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் திரு. சரண்சிங் அவர்களை முதலமைச்சர் அவர்கள் விமானத்திலிருந்து அழைத்து வருகிறார்.

# மருத்துவ துறையினர் மீது நடவடிக்கை ஏன்?

## மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விளக்கம்

*மருத்துவத் துறையில் யாரும் தவறு செய்யாமலிருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத் தான் தவறு செய்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சௌந்தரராசன் அவர்கள் கூறினார்.*

மேலவையில் நவம்பர் 10-ம் நாள் அன்று கேள்வி நேரத்தின் போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சௌந்தரராசன் அவர்கள் கூறியதாவது:

மருத்துவ மனைகளுக்கு நான் திடீரென சென்று விசாரணை, பார்வையிடல் ஆகியவை நடத்தியதன் விளைவாக மருத்துவத் துறையைச் சார்ந்த 46 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பண்ருட்டி மருத்துவ மனையில், மருந்துகளை **கையில் ரசீது** இல்லாமல் வைத்திருந்த 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

'இண்டெண்ட' குறித்த காலத்திற்குள் வரவில்லையென்றால் அவர்களுக்கு உள்ள அதிகாரத்தைக் கொண்டு உள்ளூரிலேயே மருந்துகளைத் தருவித்துக் கொள்ளலாம். அப்படிச் செய்யத் தவறியதால் அந்த 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர் டி.எம்.ஒ. வாக இருந்தாலும், தவறு செய்தது கண்டு பிடிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். மருத்துவ அதிகாரிகள் மட்டுமல்ல, பொதுவாக எல்லா பிரிவுகள் மீதும் தவறுகள் இருந்தால் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மக்கள் விரும்புகிற பணிகளை ஆற்ற இந்த அரசு இருக்கிறது, யாரும் தவறு செய்யாமலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான், தவறு செய்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆசிரியர்கள் உள்பட அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவு ஈட்டுத் தொகைக்காக 1976-77ம் ஆண்டு ரூ. 44.23 லட்சமும், 1977-78ம் ஆண்டு ரூ. 42.25 லட்சமும் கொடுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியருக்கு மாதந்தோறும் மருத்துவப்படி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு அது இயலாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னை பொது மருத்துவ மனை அருகே கட்டப்படும் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டால், அதில் இரண்டு தளங்களில் நோயாளிகளின் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டால் மாற்று சிறுநீரகம் பொருத்துவதற்கான வசதிகள் செய்யப்படும். இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சௌந்தரராசன் அவர்கள் கூறினார்.

253

# அறுவை சிகிச்சை செய்த அன்றே தாய்மார்கள் வீடு திரும்பலாம்

நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை செயலாளர்
பி. முராரி, ஐ.ஏ.எஸ்.

இந்தியத் தொழிலதிபர்கள் கழகத்தின் சார்பில் தொழிலாளர்களுக்கு மக்கள் தொகையியல் கல்வி அளிக்கும் திட்டத்தின் கீழ், சென்னையில் 27-11-79-ஆம் நாள் நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் நாடு அரசு நல்வாழ்வு குடும்ப நலத் துறை ஆணையரும், செயலாளருமான திரு. பி. முராரி அவர்கள், சென்னை நகரில் குடும்ப நல அறுவை சிகிச்சைக்குள்ளாகும் தாய்மார்கள் ஒருவார காலம் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய அவசியத்திற்கு உள்ளாகாது, அறுவை சிகிச்சை செய்து கொண்ட அன்றே வீடு திரும்புவதற்கான வாய்ப்பு முதற் கட்டமாகச் சென்னை நகரிலுள்ள தாய்மார்களுக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

உலக நல்வாழ்வு நிறுவனத்தின் (World Health Organisation) துணையோடு பெண்களுக்கான அறுவை சிகிச்சையை ''லெப்ராஸ் கோப்பி'' முறையில் (Leproscopy Technique) செய்வதற்கு மருத்துவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறதென்றார். மேலும் பேசுகையில், இதன் காரணமாக பெண்களுக்குரிய அறுவை சிகிச்சை முறை மிக இலகுவானதாக ஆக்கப்பட்டுள்ளதென்றும் இதற்கு முன்பு அறுவை சிகிச்சை செய்து கொண்ட தாய்மார்கள் ஒரு வார காலம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டுமென்றிருந்த நிலை 'லெப்ராஸ்கோப்பி' (Leproscopy Technique) முறையில் அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு இல்லையென்றும், தெரிவித்தார். இந்தப் புது முறையில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட அன்றே வீடு திரும்பலாம் என்றும், அதனால் அவர்களுக்கு எந்த விதமான கேடான பின் விளைவுகள் எதுவும் உடலில் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

உலக நல்வாழ்வு நிறுவனம் கொடையாக 'லெப்ராஸ்கோப்பி' அறுவை சிகிச்சை கருவி சென்னை நகரிலுள்ள அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையிலும், எழும்பூர் அரசு தாய்-சேய் நல மருத்துவமனையிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த கருவியைப் பயன் படுத்தி அறுவை சிகிச்சை செய்வதற்கு மருத்துவர்களுக்குரிய பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது, என்றார் அவர். இதனால் தாய்மார்கள் இன்னும் ஏராளமாக குடும்பநல அறுவை சிகிச்சையை செய்து கொள்வதற்கு முன்வருவார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நல்வாழ்வுத்துறை அரசுச் செயலாளர் அவர்கள் மேலும் பேசுகையில், பல்வேறு தொழில்களில் தாய்மார்களை ஈடுபடுத்துவதன் காரணமாக குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவதற்கான வாய்ப்பு அதிகமுண்டு என்றும், எனவே தாய்மார்களைப் பல்வேறு தொழில்களிலும் ஈடுபடுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை குறைப்பதற்கு தொழிற்சாலை நிர்வாகங்களுக்கும், அரசுக்கும் இடையில் நல்ல ஒருங்கிணைந்த பணி ஏற்படுமானால், தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களைக் குடும்பநலத் திட்டத்தை ஏற்கச் செய்வதற்கும், அதற்காக அவர்களுக்கு சிறப்பு விடுப்பு அளிப்பதற்கும், ஊக்கத் தொகை வழங்குவதற்கும், குடும்ப நலத் திட்டம் ஏற்க முனையும் போது அவர்களுக்கு வாகன வசதிகள் அளிப்பதற்கும், நல்ல வாய்ப்புகள் ஏற்படுமென்றும், அதன் காரணமாக தொழிலாளர்களிடையே குடும்பநலத் திட்டத்தை வெகுவாக வெற்றி பெறச் செய்யமுடியும் என்றும் அவர் கருத்து அறிவித்தார்.

அரசு ஏற்கனவே பெரும் தொழிற்சாலைகளை நடத்துகின்ற தொழிலதிபர்களை அணுகி, தங்கள் தங்கள் தொழிலாளர்களுக்கென இருவார கால அறுவை சிகிச்சை முகாம்களை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளது. 'போர்ட் டிரஸ்ட்', பல்லவன் போக்குவரத்துக் கழகம்

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரதமர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில், முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்களும்.



போன்ற நிறுவனங்கள் ஆண்டு தோறும் இத்தகைய முகாம்களை நடத்தித் தன்னுடைய தொழிலாளர்களைக் குடும்பநலத் திட்டத்தை ஏற்குமாறு செய்து வருகின்றன என்றும் அவர் சொன்னார்.

குடும்பநலத் திட்டத்தை சிறப்பாகச் செயல் படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும், நாடாளுமன்ற தேர்தல்கள் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்றும், பின் திட்டம் முனைப்பாகச் செயல் படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியத் தொழிலதிபர்கள் கழகக் கூட்டத்தை துவக்கி வைத்த அதன் தலைவர் திரு. டாடா அவர்கள், குடும்பநலத் திட்டத்தைத் தொழிலதிபர்கள் தங்கள் தொழிலாளர்கள் மத்தியில் செயல் படுத்துவதற்கு முழு மனதோடு முயற்சிகள் மேற் கொள்ளவில்லை என்றும், ஏதோ செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அரை மனதுடன் காரியங்களை ஆற்றியிருக்கின்றார்கள் என்றும் கூறி வருத்தம் தெரிவித்தார். நாட்டில் வளர்ச்சிப் பணிகளின் வாயிலாக ஏற்படுத்தப்படும் நல்ல வாய்ப்புகள் அனைத்தும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் முறியடிக்கப்படும் என்பதை உணர்ந்து, தொழிலதிபர்கள் குடும்ப நலத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து தங்கள் தொழிலாளர்களிடையே திட்டத்தை செயல்படுத்த முனையவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்தின் இயக்குனர் திரு. வி. ஜி. சந்தானம், டி. வி. எஸ். தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை பற்றியும், அப்படிப்பட்ட ஊக்க மளிப்பு 1945-ம் ஆண்டிலிருந்தே அளிக்கப்படுகிறதென்றும், இப்போது அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அந்தத் தொழிலாளர்களுக்கு சிறப்பு விடுப்பும், ரூ. 500/- ஊக்கத் தொகையும், வாகன வசதியும், இலவசக் கருத்தடை சாதனங்களும் பிறவும் அளிக்கப்படுகின்றன என்று கூறினார்.

டாக்டர் பி. வி. தக்கர், திரு. ஆர். என். ரத்தினம், திரு. கே. வி. சீனிவாசன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து தனியொரு கருத்தரங்கமும் நடத்தப்பட்டது.





1,2. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரதமர் அவர்களுக்கு வரவேற்பு.
3. பிரதமர் அவர்களோடு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள்.



'அட்டைப் படக் கட்டுரை:-

# தாய்க்குலத் தலைவி

**எஸ். முத்துராமலிங்கம்**

ஆறு ஒன்றின் மீது அமைக்கப்பட்டிருந்த ரயில் பாலத்தில் அந்தச் சிறுமி நடந்து கொண்டிருந்தாள். பாலத்தின் நடுப்பகுதியில் நடந்து கொண்டிருந்த நேரத்தில், எதிரே அவளை நோக்கி ரயில் ஒன்று வேகமாக வந்து கொண்டிருப்பதை பார்த்தாள். ரயிலிலிருந்து தான் தப்பிக்க வேண்டுமென்று நினைத்த போது, பின்னால் திரும்பி நீண்ட தூரம் ஓட வேண்டிய கட்டாயம் இருந்ததையும் கண்டாள். நீண்ட தூரம் ஒடித்தப்பிப்பதற்கு முன்பாக ரயில் நிச்சயமாகத் தன் உயிரை வாங்கிவிடும் என அந்தச் சிறுமி உணர்ந்தாள். ரயில் பாலத்தின் கீழே வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடும் ஆறு. எதிரே வேகமாக வந்து கொண்டிருக்கும் ரயில். இது இரண்டையும் பார்த்த அந்தச் சிறுமி, தன் வாழ்வை முடிக்கப் போவது ரயிலா? அல்லது பாலத்திற்கு கீழே இருக்கின்ற ஆறா? என்ற மனப் போராட்டத்திற்கு உள்ளானாள். இது தான் அச்சிறுமியின் நிலை. ரயில் வேகமாக வந்து கொண்டிருந்தது. நெருங்கியும் விட்டது. கண நேரத்தில் அந்தச் சிறுமி பாலத்திலிருந்த இரும்பைப் பிடித்துக் கொண்டு கீழே தொங்கினாள். ரயில் சென்றது.



அந்தச் சிறுமிக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. தொங்கிக் கொண்டிருந்த அவளை ரயில் போன பின் அப்பாலத்தில் வந்து கொண்டிருந்த ஒருவர் கை கொடுத்து தூக்கி விடுகிறார். அப்படி வாழ்வின் இறுதிக்கு சென்று திரும்பியவர் தான் தாய் குலத் தலைவி திருமதி மார்கரெட் சாங்கர்!

உலகம் முழுவதும் குடும்ப நலத் திட்டத்தை ஓங்கச் செய்த திருமதி மார்கரெட் சாங்கர் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சி, பயம், அச்சம் ஆகிய எல்லாவற்றையும் அவரிடமிருந்து போக்கிவிட்டது என்று, அவருடன் இணைந்து பணியாற்றி, 92 வயதில் இன்றும் லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கும் மூதாட்டி டாக்டர் எலினா ரைட் (Dr. Elina Wright) கூறியுள்ளார். அந்த நிகழ்ச்சிக்குப் பின் திருமதி சாங்கர் பய உணர்ச்சிக்கு ஆளாகவேயில்லை என்றும் டாக்டர் ரைட் கூறியுள்ளார். அத்தகைய திருமதி மார்கரெட் சாங்கர் நடப்பு 1979 ஆண்டில் நூற்றாண்டு விழாவுக்குள்ளாகியிருக்கிறார். நூற்றாண்டு விழா கண்ட திருமதி சாங்கர், இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும், அவர் இந்தச் சமுதாயத்திற்காக ஆற்றியிருக்கின்ற அரிய பணி என்றென்றைக்கும் நீடித்து பயன்களை உலகம் முழுமைக்கும் அளிக்குமென்பதில் யாரும் ஐயப்பாடு கொள்ளத் தேவையில்லை. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களும் பிறந்த செப்டம்பர் மாதத்தில் தான் திருமதி மார்கரெட் சாங்கர் பிறந்தார். 1879-ம் ஆண்டு அயர்லாந்து நாட்டைச் சார்ந்த தன் பெற்றோர்களுக்கு ஆறாவது குழந்தையாக திருமதி சாங்கர் பிறந்தார். அவரோடு பிறந்தவர்கள் பதினோரு பேர்கள்! திருமதி சாங்கர் பள்ளிப் படிப்பை முடித்த நேரத்தில், அளவுக்கு அதிகமான பிள்ளைகளைப் பெற்றதன் வாயிலாக காச நோய்க்கு உள்ளாகி இருந்த தன் தாயை கவனிக்கும்படி பணிக்கப்பட்டார். காலனை வரவேற்றுக் கொண்டிருந்த தன் தாயை திருமதி சாங்கர் கண்ணும் கருத்துமாக கவனித்து வந்தார்.

மருத்துவக் கலை வளராத காலம் அது. எனவே தன் தாயாருக்கு உற்ற காசநோயைப் போக்க விரும்பிய சாங்கர், பல மருத்துவப் புத்தகங்களைப் படித்தார். விழிப்புணர்ச்சி பெற்றார். மருத்துவராக வேண்டுமென விரும்பினார். பின் செவிலியர் பயிற்சியே போதுமானது எனக் கருதி அப்பயிற்சி பெற்றார். அப்பயிற்சியின் இறுதி ஆண்டில் வில்லியம் சாங்கரைச் சந்தித்துப் பழகி மணந்து கொண்டார். அவருடன் வாழ்ந்து இரு ஆண் மக்களையும், ஒரு பெண்ணையும் பெற்றெடுத்தார். இந்த நாட்களில் அவரும் காச நோய்க்கு உள்ளானார். என்றாலும் தன்னுடைய மனத் திண்மையின் காரணமாக இறுதி வரையில் அந்நோயோடு எதிர் நீச்சல் போட்டுக் கொண்டே உலகத்திற்கு பெருந் தொண்டு ஆற்றி வந்தார்.

திருமதி சாங்கர் தன்னைத் தானே குடும்ப நலத் திட்டப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டு, குடும்ப

நலத்திட்டக் கருத்துக்களை தான் சத்தித்த எதிர்ப்புக்களை எல்லாம் மீறி உலகத்திற்கு அளிக்காது இருந்திருப்பாரே யானால், 1798 ஆண்டு மால்தூஸ் என்ற பொருளாதார பேரறிஞர் மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி அறிவித்த கருத்துக்கள் புத்தகத்தோடு நின்றுவிட்டது போல், இந்தத் திட்டமும் ஒரு மூலையிலேயே முடங்கிப் போய் இருந்திருக்கும்! இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் உலகம் முழுவதும் பழைய எண்ணங்கள், வேண்டாத நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள் அனைத்தும் அநேகமாக எல்லா உலக சமுதாயத்தினரிடையேயும் பரவியிருந்த காலம் அது. அது, பிறப்புக் கட்டுப்பாடு (Birth Control) என்பதைப் பற்றி பேசுவதற்கே பலரும் அஞ்சியிருந்த காலம். பிறப்புக் கட்டுப்பாடு பற்றி பேசுவது பாபகரமான ஒன்று. அது பாவத்திற்குரிய பொருள்—அறுவெறுக்கத்தக்கது, பேசக் கூடாதது —ஒழுங்கீனங்களுக்கு வித்திடக் கூடியது எனக் கருதி யாரும் இதன் பால் கவனம் செலுத்தாதிருந்த நேரம்.

இந்நிலையிலிருந்த பிறப்பு கட்டுப்பாடு (Birth Control) திட்டத்தில் இன்றைக்குக் குடும்ப நலத் திட்டம் என்ற பெயரில் உலகை வரவேற்கச் செய்த பெருமை திருமதி சாங்கரைத் தான் சாரும். திருமதி சாங்கர் 'நியுயார்க்' நகரில் பணியாற்ற வந்தபின் அவரது வாழ்க்கையின் போக்கே மாறியது. அவரது கவனிப்பில் இருந்த நோயாளிகளில் ஒருவர் தானே கருச்சிதைவு செய்து கொண்டதால், இறப்பின் வாயிலருகே போய் விட்டார். அவரை வந்து பார்த்த மருத்துவர் "அம்மா நீங்கள் மீண்டும் கருவுற்றால் சாக வேண்டியதுதான்?" என்று சொல்லிவிட்டார். "சரிங்க டாக்டர் அதைத் தவிர்க்க நான் என்ன செய்ய வேண்டும்" இது அந்தத் தாயின் கேள்வி.

சட்டப்படி கருத்தடை பற்றி விவரம் சொல்பவர்கள் மருத்துவராக இருந்த போதிலும் கூட சிறைக்கு செல்ல வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இருந்தது. எனவே அந்த மருத்துவர் கருத்தடைக்கான வழி வகைகளை அந்தத் தாய்க்கு சொல்லாது உங்கள் கணவரைத் திண்ணையில் உறங்கச் சொல்லுங்கள் எனக் கூறிச் சிரித்து கீழே சென்றுவிட்டார். சில மாதங்களுக்குப் பின் அத்தத்தாய் கருவுற்றார். மருத்துவர் சொன்னது போல் உயிரையும் விட்டார்.

அந்தத் தாய் இறந்துவிட்ட பின்பு திருமதி சாங்கர் தெருக்களிலே அலைந்து திரிந்தார். எங்கே போகிறோம் என்றே அவருக்குத் தெரியாது. தன் கையில் கடினமான பெட்டி ஒன்று இருப்பதையும் உணரவில்லை. ஒன்று மட்டும் அவருக்கு தெளிவாகப் புரிந்தது. தன் வாழ்க்கைப் பாதையே மாறிவிட்டதாக அவர் உணர்ந்தார்.

செவிலியராகப் பணியாற்றப் போவதில்லை என்று தீர்மானித்த அவர், எங்கோ ஒரு மூலையில் இருந்து தாய்மார்கள் படும் தொல்லைகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்து விடக் கருதவில்லை. தன்னைத் தானே இப்பணியில் அர்ப்பணித்துக் கொள்வது என்ற முடிவை மேற்கொண்டார். குடும்ப நலத் திட்ட முறைகளைப் பற்றி அவர் காலத்தில் வாழ்ந்த மருத்துவர்கள் எந்தவிதமான கருத்துக்களையும் அவருக்கு சொல்ல முன் வரவில்லை. திட்டம் குறித்த எழுத்துச் சான்றுகள் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஏதாவது உண்மைகள் தெரியுமா? அந்த உண்மைகளை தாய்மார்களுக்குச் சொல்லி, தாய்மார்களை இந்த தொல்லையிலிருந்து காப்பாற்ற இயலுமா என திருமதி சாங்கர் அறிஞர் பலரைச் சந்தித்தார். பல மருத்துவர்களைச் சந்தித்தார். வேறு பலரையும் சந்தித்தார். எல்லா இடங்களிலேயும் அவர் மனச்சோர்வு அடையும் விதத்தில் எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. பிரெஞ்சு நாட்டில் செவி வழிச் செய்தியாகப் பிறப்பு கட்டுப்பாடு பற்றிய உண்மைகள் நிலவுவதாக அறிந்து, அவர் அங்கு சென்றார். பின்பு நெதர்லாந்து நாட்டுக்குச் சென்றார். நெதர்லாந்தில் டாக்டர் அலிட்டா ஜேகப் (Dr. Aletta Jacob) முதல் கருத்தடை நிலையத்திற்குச் சென்று, டாக்டர் ஜோன்ஸ் ரட்கன் (Dr. Johannes Rutgun) என்பவரின் கருத்தடை முறைகளை அறிந்து நியுயார்க் திரும்பி வந்தார்.

நியுயார்க் திரும்பிய பிறகு 1916-ல் முதன் முதலாக அங்கு பிறப்பு கட்டுப்பாடு நிலையம் (Birth control clinic) ஒன்றைத் திறந்தார். அந்நிலையத்தை திறந்து 10 நாட்களில் அவர் கைது செய்யப்பட்டார். அன்றைக்கு அமெரிக்க நாட்டிலிருந்து வந்த காம்ஸ்டாக் சட்டம் (Comstalk law) பிறப்பு கட்டுப்பாடு பற்றி யாரும் பேசுவதை அனுமதிக்கவில்லை. மீறி வெளியிட்டால் உரியவர்களை சிறைக்கு உள்ளாக்கியது அந்தச் சட்டம். பிறப்பு கட்டுப்பாடு நிலையத்தை திறந்த திருமதி சாங்கர் அவர்கள் 10 நாட்களில் கைது செய்யப்பட்டார். அவரோடு செவிலியராக அந்த நேரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அவரது தங்கையும் கைது செய்யப்பட்டார். அண்ணல் காந்தியடிகள் சத்திய சோதனை எழுதியதைப் போல சாங்கர் சட்ட சோதனை செய்துக் கொண்டிருந்தார். சட்டத்தைச் சோதித்து சட்டத்திலேயிருந்த வேண்டாத பகுதிகளை நீக்கி சமுதாயத்திற்கு பயன் தருகின்ற வகையில் பிறப்பு கட்டுப்பாடு திட்டத்தை பரப்ப வேண்டுமென்ற எண்ணம் கொண்டு, திருமதி சங்கர் அங்கு இருந்து வந்த சட்டத்தை மீறி திட்டத்தைப் பரப்ப முற்பட்ட தன் காரணத்தினால் கிட்டத்தட்ட 8 முறை சிறைக்கு சென்று திரும்பினார்.

இன்றைக்கு இருந்த மருத்துவ உலகம் திருமதி சாங்கரை ஒதுக்கியது. பத்திரிகைகள் அவரது பணியை பாராட்டாது கண்டித்தன, சித்திரவதை செய்தன. மாதா கோவில்கள் திருமதி சாங்கரை ஒதுக்கி வைத்தன. அவர் அந்த பணியை ஏற்று சமுதாயத்தை எதிர்த்து நடைபோட்டுக் போட்டுக் கொண்டிருந்த அந்த காலத்தில், அதிகம் படித்திராத, உலகத்தை முழுமையாக உணராத பருவ மங்கையாக திருமதி சாங்கர் இருந்தார். சமுதாயத்தில் திருமதி சாங்கருக்கு தனிப்பட்ட செல்வாக்கோ, அந்தஸ்தோ, பண பலமோ எதுவும் இல்லை. அவருக்கு கிடைத்தது எல்லாம் சமுதாயத்தின் எல்லா முனைகளில் இருந்தும் ஏக்கம், பேச்சும், தண்டனையும் தான். வழக்காடி வழக்காடி திருமதி சாங்கர் சட்ட முனைகளையெல்லாம் மழுங்கச் செய்து திட்டத்திற்கு ஆதரவான சூழ்நிலைகளை அங்கு உருவாக்கினார். அதோடு தொடர்ந்து இந்த கருத்துக்களை பரப்ப வேண்டுமென்று கருதிய திருமதி சாங்கரை பெண் புரட்சிக் காரப் பெண் (The women Repel) என்ற பத்திரிகையை வெளியிட்டார். பிறப்பு கட்டுப்பாடு என்ற துண்டு வெளியீட்டை வெளியிட்ட அவர் அரசின் தடைக்கு உள்ளானார். அவர் வெளியிட்ட துண்டு வெளியிடுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இறுதியில், காலப்போக்கில் அரசும், சமுதாயமும் அதை ஏற்றுக் கொண்டன. பின் நாட்களில் அவர் வெளியிட்ட பிறப்பு கட்டுப்பாடு என்ற துண்டு வெளியீடு பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகம் முழுவதிலும் விநியோகிக்கப் பட்டன.

திருமதி சாங்கர் 1916-ல் அங்கு பிறப்பு கட்டுப்பாடு நிலையத்தைத் திறந்து விட்டதோடு நின்றுவிடாமல், 1921-ஆம் ஆண்டு நியுயார்க் நகரில் முதல் அமெரிக்க பிறப்பு கட்டுப்பட்டு மாநாட்டை நடத்தினார். பின் 1925 ஆம் ஆண்டில் நியுயார்க் நகரில் அனைத்து உலக பிறப்பு கட்டுப்பாடு மாநாட்டையும், 1927-ஆம் ஆண்டு ஜெனிவாவில் உலக மக்கள் தொகை மாநாட்டையும் நடத்தி பல்வேறு முடிவுகளை மேற்கொண்டு உலகத்திற்கு அறிவித்தார். 1928-ஆம் ஆண்டு பிறப்பு கட்டுப்பாடு பற்றிய தேசிய குழு (National committee on Federal legislation for birth Control) என்ற ஒன்று அங்கே அமைக்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டில் தன் பணிகளுக்கான அமெரிக்க விருதை திருமதி சாங்கர் பெற்றார். 1935-36 நடுவில் கருத்தடை இயக்கம் தோன்றவும், அமெரிக்கக் கருத்தடை சங்கம் அமைக்கவும் வழி கோலினார். திருமதி சாங்கர் தன் வாழ்நாளில் ஏராளமான விருதுகளையும், பாராட்டையும் கௌரவப் பட்டங்களையும் பெற்றார்.

திருமதி எமிலி டாப்ட் டக்ளாஸ் என்பவர் ஐக்கிய அமெரிக்கக் காங்கிரசைச் சேர்ந்த செனட்டர், பால்டக்ளாஸ் அவர்களின் துணைவியாவார். மனைவியாக, தாயாக, அரசியல் வாதியாக, நல்ல நூல் ஆசிரியராக, எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் முழுமையானவராகத் திகழ்ந்தார், திருமதி டக்ளாஸ். அவர் தாய்குல தலைவியான திருமதி சாங்கரைப் பற்றி எழுதினார். "குடும்ப நலத் திட்டம் உலகில் வேரூன்ற தொழில் நுணுக்க யுகம் மலர்ந்தது தான் காரணம். ஆழ்ந்த தூக்கத்திலிருந்த உலகைப் பாடித்துயில் எழுப்பும் குயிலாகப் பணியாற்றி திருமதி சாங்கர் அயராது பணியாற்றி வந்ததனாலேயே வெற்றி கண்டவர் திருமதி சாங்கர்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகம் அறிந்த பெருமை மிக்க எழுத்தாளர்களில் ஒருவரான எச்.ஜி. வேல்ஸ் திருமதி சாங்கரைப் பாராட்டி "திருமதி சாங்கர் துவக்கியுள்ள இயக்கம், வருங்காலத்தில் நல்ல பயனை விளைவிக்கும். உலகிலேயே அவர் சிறந்த பெண்மணி" என்று கூறியுள்ளார். ("she is the greatest woman in the world; the movement she started will grow to be a hundred years from now, the most influential of all time in controlling man's destiny on earth" - H.G. WELLS.) பெர்ல் எஸ். பக்ஸ் என்று புகழ் மிக்க

ஒருங்கிணைந்த குடும்பநலத்திட்ட மாநாடு, கோவை

...ன்புமிகு ஆர். சௌந்தரராசன், பி.கா.

தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்



கோவையில் நவ. 19-ம் நாள் நடைபெற்ற மாநில குடும்ப நலத் திட்ட மாநாட்டை தமிழ் நாடு அரசின் நல்வாழ்வு குடும்ப நலத் துறை இணைச் செயலாளர் திரு. எம். வைத்தியலிங்கம் அவர்கள் தலைமை வகித்து நடத்துகிறார். குடும்ப நலத் துறை இயக்குநர் டாக்டர் எர்னஸ்ட் டேவிட், நல்வாழ்வுத் துறை இயக்குநர் டாக்டர் பி. கபாலி, வ. ஆ. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பட்டிகர், துணை இயக்குநர்கள் டாக்டர் வேணுகோபால், திரு.வி. நாமதேவன் ஆகியோர் அருகில் உள்ளனர்.

இன்னொரு எழுத்தாளர் "நமது காலத்தில் மனிதாபிமான உணர்வுகளைக் காப்பதற்காக போராடியவர் திருமதி சாங்கர்" என்று கூறியுள்ளார். (or a woman of destiny, a gallant crusader who has led the greatest humanitarian struggle of our time; - Hearl S. Buck".)

பண்டித நேரு அவர்களால் பாராட்டப்பட்ட திருமதி சாங்கர் 1936-ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகளைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டார். திருமதி சாங்கர் திட்டம் தொடர்பான பல புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

'எந்தத்தாயும், தான் குழந்தை பெற வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் நிலை உருவாகும் வரையில் முழுமையான சுதந்திரம் பெற்றவர் அவள்' எனத் திருமதி சாங்கர் எழுதியுள்ளார். அந்த உரிமையைக் கோடிக்கணக்கான உலகத் தாய்மார்கள் பெற்று வாழ வேண்டும் என்பதற்காக அவர் அரும் பாடுபட்டார். "நான் இந்த நல்ல பணியை செய்வதற்காகவே பிறந்தவள். இந்தப் பணியைச் செய்து முடிக்கும் வரை என் தொண்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கவே முடியாது. அப்படிச் செய்தால் என் கண்களை தான் இழப்பதற்கு ஒப்பாகும்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மார்கரெட் சாங்கர் கதை ("The Margarette Songer Story") என்ற புத்தகத்தை வெளியிட்ட லாரன்ஸ் லேடர் என்பவர், கருத்தடை என்பது விஞ்ஞானத்தின் வழி கிடைத்த ஒரு கருவி என கருதாது, அது நம்பிக்கையூட்டும் ஒரு ஒளி என்று திருமதி சாங்கர் கருதினார் எனக் கூறியுள்ளார். தன் வாழ்நாள் முழுவதும் குடும்ப நலத் திட்டத்தை தாய்மார்களிடையே பரப்பத் தாய்மார்கள் நலத்தையும், குழந்தைகள் நலத்தையும் பேணுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் குடும்ப நலத் திட்டம் என்ற திருமதி சாங்கர் அவர்கள், அனைத்துலக நிறுவனம் ஒன்றை அமைத்தார். 1949-ஆம் ஆண்டில் ஸ்மித் கல்லூரியின் கௌரவ எல்.எல்.டி. பட்டம் பெற்றார். 1952 ஆம் ஆண்டில் பம்பாயில் நடந்த 3-வது அனைத்துலக மாநாட்டில் (Conference of Planned Parenthood) வெகுவாக பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார். 1959-ஆம் ஆண்டில் டில்லியில் ஆறாவது அனைத்துலக மாநாடு (Sixth International Conference of Planned Parenthood) ஒன்றை இந்திய நண்பர்களின் துணையோடு தில்லியில் நடத்தினார்.

பல்வேறு எதிர்ப்புகளையும் சந்தித்து, சிறை தண்டனையும் ஏற்று, சமுதாயத்தின் கேலிக்கும் ஏச்சுக்கும் உள்ளாகி, மனத்தெளிவு, தொலை நோக்கோடு திருமதி சாங்கர் குடும்பநலத் திட்டத்தை உலகம் முழுவதிலும் பரப்பி இருக்காவிட்டால், இன்று உலகத்தில் தாய்மார்களுக்குப் பயனுள்ள குடும்ப நலத் திட்டம் கிட்டி இருக்காது என்றே சொல்லலாம். இந்த ஆண்டு நூறாண்டு நிறைவு விழாவிற்கு உள்ளாகி இருக்கும் திருமதி சாங்கர் அவர்களின் தொலை நோக்கும், அயராத தொண்டும் உலகத் தாய்மார்களுக்கு உய்வை ஏற்படுத்தி தந்திருக்கின்ற காரணத்தால் அவரைத் தாய்க்குலத் தலைவி என்று கூறுவது மிகப் பொருத்தமானதாகும். உலகத் தாய்குலம் அவரை என்றென்றைக்கும் மறவாது என்பதில் ஐயப்பாடு இல்லை!

# காஞ்சீபுரம்ரோட்டரியின் குடும்ப நலச் சிறப்புக் கூட்டம்!

காஞ்சீபுரம் ரோட்டரி சங்கத்தின் சார்பில் 22.11.79 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் செங்கை மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர், திரு. எஸ். மெய்யப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ''இயற்கையோடு இயைந்த வாழ்வு'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இந்தச் சிறப்புரையில், ''குடும்ப நலத் திட்ட முறைகள் இயற்கையோடு இயைந்த வாழ்வுக்கு முரண்பாடுள்ளதாக மேற்போக்காகத் தோன்றிய போதிலும், உண்மையில் பார்க்கப் போனால், இயற்கையென்றோ இறைவனென்றோ சொல்லப்படுவதனால் உண்டாக்கப் பெற்ற மனித மூளையின் சிந்தனையிலிருந்து தோன்றிய விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், பொறி இயல், மற்றும் கட்டிடக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, பரதக் கலை போன்ற அனைத்துமே இயற்கையின் திருவிளையாடல் என்றுகொள்ள வேண்டுமே தவிர, அவைகளைச் செயற்கையென்று கொள்ளுவது பொருந்தாது. அதனால் குடும்ப நல முறைகளும் இயற்கைக்கு முரணானதல்ல'' என்று மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர் விளக்கிக் கூறினார்.

இச்சிறப்புக் கூட்டத்தின் போது புதிய ரோட்டரி உறுப்பினராக திரு. என். சி. வரதன் சேர்க்கப் பெற்றதற்கு அடையாளமாக சிறப்பு விருந்தினர் அவருக்கு ரோட்டரி அடையாளச் சின்னத்தை அணிவித்தார்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் காஞ்சீபுரம் ரோட்டரி சங்கத் தலைவர் திரு. பி. கலியபெருமாள் வரவேற்றுப் பேசினார். இறுதியில் செயலாளர் திரு. கே. சோமசுந்தரம் நன்றி கூறினார்.

பிறகு குடும்ப நல சினிமாப் படக் காட்சி நடைபெற்றது.

# கோவையில் குடும்பநலத் திட்ட மாநில மாநாடு!

நடப்பு 1979-80 ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தை தீவிரப்படுத்துவதற்காகவும், தாய் சேய் நலத் திட்டம் போன்ற திட்டங்களை முனைப்போடு செயல்படுத்துவதற்காகவுமான வழிவகைகளைக் கண்டு ஆராயும் பொருட்டு குடும்ப நலத் திட்ட மாநில மாநாடு ஒன்று கோவையில் கடந்த 19.11.79-ம் நாள் நடைபெற்றது.

கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மாவட்ட மருத்துவ அலுவலர்கள், மாவட்டக் குடும்ப நல—தாய் சேய் நல அலுவலர்கள், மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர்கள், மாவட்ட நல்வாழ்வு அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். மருத்துவ குடும்ப நலத் துறை இயக்குநர் டாக்டர் எர்னஸ்ட் டேவிட், நல்வாழ்வுத் துறை இயக்குநர் டாக்டர் கபாலி, குடும்ப நல துணை இயக்குநர் (பொறுப்பு) திரு. வி. நாமதேவன், மருத்துவத் துறை துணை இயக்குநர் டாக்டர் வேணுகோபால் ஆகியோர் கலந்து கொண்ட இந்த மாநாட்டை தமிழ்நாடு அரசு நல்வாழ்வு—குடும்ப நலத் துறையின் இணைச் செயலாளர் திரு. எம். வைத்தியலிங்கம் அவர்கள் தலைமை வகித்து நடத்தினார். வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பட்டிகர் அவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் குடும்ப நலத் திட்டத்தை எப்படித் தீவிரமாகச் செயல்படுத்துவது என்பது பற்றியும், தீவிரத்தோடு செயல்படுத்துகின்ற அதே நேரத்தில் தரம் குறையாதவாறு எப்படிப் பார்த்துக் கொள்வது என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய அரசு தமிழகத்திற்குத் தந்துள்ள இலக்கையொட்டி, அதையும் மீறிய சாதனையை உருவாக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்த போதிலும் கூட, குடும்ப நல நிரந்தர சிகிச்சை திட்டத்தை நிறைவேற்றும் போது, தரத்தைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாக இருக்க வேண்டுமென்ற மனப்போக்கு மாநாட்டில் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்த ஒவ்வொரு அலுவலரின் எண்ணமாக வெளிப்பட்டது.

குடும்ப நலத் திட்ட செயலாக்கத்தில் தரம் காக்கப்பட வேண்டுமென்பதை அனைத்து அலுவலர்களும் வலியுறுத்திப் பேசினர்.

அதேபோல் தாய் சேய் நலத் திட்டத்தை முனைப்போடு செயல்படுத்துவது குறித்தும், குடும்ப நல தற்காலிக முறைகளை மக்களிடையே ஊக்கப்படுத்துவது குறித்தும் இந்த மாநாடு விவாதித்து முடிவுகளை மேற்கொண்டது. அன்று காலை துவங்கிய இந்த மாநாடு மாலை வரை விவாதங்களை நடத்தி முடிவுகளை மேற்கொண்டது.

இந்த மாநாட்டையொட்டி மாநாடு நடந்த மண்டபத்தில் குடும்ப நலப் புகைப்படக் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட மாவட்ட அலுவலர்கள் அனைவரும் குடும்ப நலத் திட்ட செயலாக்கத்திற்கு விரைந்து பணியாற்றி இருப்பதாகச் சொன்னார்கள். விவாதங்களின் தொடர்பாக முடிவுகள் மேற்கொள்ளப்பட்டபின் அன்று மாலை மாநாடு இனிது முடிவுற்றது.





# பரிசு

மு. நமசிவாயம்

## காட்சி 1

நேரம் : காலை

இடம் : கடைத் தெரு

நிலை : (இலட்சுமி கடைத்தெரு செல்கிறாள். அங்கே கமலம் வருகிறாள்)

கமலம் : இலட்சுமி! இலட்சுமி! என்னடி நான் கூப்பிட்டுக்கிட்டே இருக்கிறேன், நீ பாட்டுக்கு வேகமாக எங்கடி போய்ட்டே இருக்கிறே.

இலட்சுமி : அந்த கந்தசாமி மளிகை கடைக்குத்தான் போய்ட்டு இருக்கேன். 1-ஆம் தேதியிலிருந்து தினம் ஒரு ஆளை வீட்டுக்கு அனுப்பி எங்க உயிரையே வாங்கிக்கிட்டு இருக்கார். எங்க அப்பாவோட முதலாளி வெளியூர் போய் இருந்தார். அதனாலே சம்பளம் இன்னிக்குத்தான் கிடைத்தது. பணம் கிடைத்ததும் கடனை கொடுத்துட்டுவான்னு, அம்மா சொன்னாங்க.

கமலம் : அது சரி. . . நீ உல்லாசப் பயணம் போறதை பற்றி உங்க அப்பாகிட்டே ஒன்றுமெ பேசலையா ?

இலட்சுமி : எனக்கும் உல்லாசப்பயணம் போகணும்தான் ரொம்ப ஆசையா இருக்கு. அப்பாகிட்டே சொல்லத்தான் பயமா இருக்கு. ம். . . . என்ன செய்ய . . . உங்க வீட்டிலே நீயும் உங்க அண்ணனும்தான் அதனாலே நீ கேட்கிறதையெல்லாம் உங்க அப்பா வாங்கி தருகிறார். ம். . . எங்க வீட்டிலே அப்படி இல்லையே. . .

கமலம் : என்னடி, உங்க அண்ணன்கூட மெட்ராசிலே வேலை பார்க்கிறான்னு சொன்னியே! உனக்கு என்னடி கஷ்டம்.

இலட்சுமி : அவன் என்ன சம்பாதிக்கிறான்? பாவம் ஏதோ ஓட்டலில் கணக்குப் பிள்ளையாக இருக்கிறான். போன வருடம் எஸ். எஸ். எல். சி-யிலே 400 மார்க்குக்கு மேலேதான் எடுத்தான். எங்க அப்பாவாலே அவனை மேலே படிக்கவைக்க முடியலே. இரண்டு தம்பிகளையும், தங்கைகளையும் காப்பாற்ற வேண்டுமே என்று யாரோ தெரிஞ்சவங்க ஒட்டலில் கணக்குப் பிள்ளையாக சேர்த்து விட்டு இருக்கிறார்கள். (கமலத்தின் அண்ணன் வந்துகொண்டு இருக்கிறான்).

கமலம் : என்ன அண்ணே ! இந்தப்பக்கம்.

குமார் : என்னைஅப்பா, இஞ்சினீயரிங் காலேஜிலே சேர அப்ளிகேஷன் வாங்கிட்டு வரச் சொன்னார். அதனாலேதான் போய்ட்டு இருக்கிறேன்.

இலட்சுமி : நான் போய்ட்டு வர்றேன் கமலம், அப்பாவை கேட்டு உல்லாசப் பயணம் வருகிறதைப் பற்றி முடிவு சொல்லுறேன்.

கமலம் : சரி இலட்சுமி.............நாளைக்கு உங்க வீட்டுக்கு வாரேன். (இலட்சுமி செல்கிறாள். கமலமும், குமாரும் பேசிக் கொண்டே செல்லுகின்றனர்)

குமார் : லட்சுமி பாவம் கமலா: அவளோட அண்ணன் ரமேஷ் இரண்டு வருஷத்திற்கு முன்னாடி என்னோடதான் எஸ்.எஸ்.எல்.சி. படிச்சான். என்னை விட மார்க்கு எல்லாம் அதிகமாகத்தான் எடுத்தான். ஆனால் பாவம் அவன் தலைவிதி அவங்க அப்பா அதுக்கு மேல் அவனை படிக்க வைக்க முடியாமல் ஏதோ வேலைக்கு போக சொல்லி விட்டார்.

கமலம் : என்ன அண்ணா செய்றது. நாம இரண்டு பேரையும் சேர்த்து மொத்தம் நான்கு பேர் நம்ம வீட்டிலே இருக்கிறோம். நம்ம அப்பா மாதிரி அவங்க அப்பாவும் சம்பளம் வாங்குகிறார். அவங்க வீட்டிலே உள்ளவங்க எண்ணிக்கை அதிகம் அண்ணா. அதனாலேதான் அவங்க ரொம்ப கஷ்டப்படுகிறாங்க. அதனாலே அவ அண்ணனை காலேஜிலே படிக்க வைக்க முடியலே.

(இருவரும் பேசிக் கொண்டே செல்கிறார்கள்)

—திரை—

159885

# காட்சி 2

நேரம் : காலை

இடம் : இலட்சுமி வீடு

நிலை : (போஸ்ட் மேன் வருகிறார். கதவைத் தட்டுகிறார்)

இலட்சுமி : அம்மா! அம்மா! போஸ்ட் மேன் வந்திருக்காரு! அண்ணன் உம்பேரிலே மணியார்டர் அனுப்பியிருக்கிறானாம்.

அம்மா : இதோ வந்துட்டேன்.
(பணத்தை வாங்கிகொள்கிறாள். போஸ்ட் மேன் செல்கிறார்)

இலட்சுமி : அம்மா! அம்மா! நான் உங்ககிட்டே ஒன்று கேட்கிறேன். நீ தான் அப்பா கிட்டே சொல்லி ஏற்பாடு செய்யனும்மா : (தயக்கத்துடன் கேட்கிறாள்).

அம்மா : என்ன தயக்கம் விஷயத்தை சொல்லு.

இலட்சுமி : எங்க பள்ளிக்கூடத்து தலைமை ஆசிரியை 9-ம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு மாணவிகள் விடுமுறையை நன்றாக கழிக்க வேண்டி ஒரு உல்லாசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுக்கு நிறைய மாணவிகள் பணம் கொடுத்து இருக்கிறார்கள். எனக்கும் அவர்களுடன் போக ஆசையா இருக்கு.........

அம்மா : என்ன! உங்க அண்ணன் இப்பதான் பணம் அனுப்பி இருக்கிறான். அவனே பாவம் ... ஹோட்டலில் சாப்பாடு போக 40 ரூபாய் கையிலே கொடுக்கிறாங்க. அதிலே கை செலவுக்கு 10 ரூபாய் எடுத்துக்கிட்டு 30 ரூபாய் அனுப்புகின்றான்.

இலட்சுமி : அம்மா! என்னைப் பொறுத்த வரை 6வது படிக்கிறதிலிருந்து ஏதாவது கேட்டு இருக்கிறேனா? எஸ்.எஸ்.எல்.சி. படிச்சவுடன் வீட்டிலே இருக்க சொல்லப் போறீங்க. அதனாலே இந்த தடவை மட்டும் எப்படியாவது அனுப்பும்மா.

அம்மா : வீட்டிலே உன்னை யாரு வைத்து சாப்பாடு போடப் போறாங்க. நீலகிரியிலே நம்ப சொந்தக்கார மாப்பிள்ளை இருக்காரு...அவருக்கு அம்மா அப்பா சின்ன வயசிலே இறந்துட்டாங்களாம். அவர் அரசாங்க வேலையிலே கொஞ்சம் சம்பளம் வாங்கிறார். அவங்க தாத்தா உங்க அப்பா கிட்ட உனக்கு ஒன்றுமே கொடுக்காமே என் பேரனுக்கு சீக்கிரம் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று கேட்டாராம். அதிர்ஷ்டம் வீடு தேடி வருதுனு உன் அப்பாவும். நம்ம அரசாங்க திட்டப்படி பெண்ணுக்கு 18 வயதிற்கு மேற்பட்டுத்தான் கல்யாணம் செய்யணும் என்பதற்காக சிறிதுகாலம் கழித்து வைத்துக் கொள்ளலாம்னு கூறியுள்ளாராம். அங்க போய் நீ உன் இஷ்டப்படி நல்லாயிரும்மா.

இலட்சுமி : என்னம்மா நீ, நான் ஏதோ கேட்கிறேன், நீ ஏதோ சொல்றே. நான் கேட்டதுக்கு பதில் சொல்லும்மா.........

அம்மா : உனக்கு என்னமோ விளையாட்டா இருக்கு. நான் பணத்துக்கு எங்கபோறது. அப்பாகிட்ட கேட்டு அப்பாவை வருத்தப்படச் சொல்றியா. உம்! பள்ளிக்கூடம் திறந்தா தம்பிகளுக்கு புஸ்தகம் வாங்கவே 150 ரூபாய் வேணும். ஒரு உடுப்புக்கு மேலே ஏதாவது ஒரு நல்ல உடுப்பு இருக்கா! உன் கடைசி தங்கை பிறந்ததிலிருந்தே நோயாளியாக இருக்கிறான். ஒரு நல்ல டானிக் கூட வாங்க முடியலே. இதையெல்லாம் தெரியாமே நீ உல்லாசப்பயணம் போக பணம் கேட்கிறீயே, உனக்கு வரப்போற மாப்பிள்ளை உன்னை எல்லா இடத்துக்கும் கூட்டிகிட்டுப்போய் காட்டுவார். அங்கேயாவது போய் சந்தோஷமா இரும்மா.

இலட்சுமி : (வருத்தத்துடன்) ஹம்: என் தலையிலே அப்படி எழுதியிருந்தா யாரு என்ன செய்ய முடியும். கஷ்டப்படுகிறதுக்குனே நாங்க உங்களுக்கு குழந்தைங்களா பிறந்திருக்கிறோம்.

அம்மா : ஆமாண்டி— பத்து வருஷத்திற்குமுன்னாடியே உன் சினேகிதி கமலத்தோட அம்மா இரண்டு பிள்ளைகளோட ஆப்ரேஷன் செய்து கொண்டார்கள். இப்போ சந்தோஷமா வாழ்கிறாங்க. நானும் இதைப்பார்த்து உனக்கு அடுத்த தம்பி பிறந்தவுடனே ஆப்ரேஷன் செய்து கொள்ளலாம்னு உங்க அப்பாகிட்ட சொன்னேன். அவர் அதை விரும்பவில்லை. ஆனால் இன்னிக்கு நாம் பண வசதியில்லாமல் நம் குடும்ப தேவைகளை எல்லாம் வாங்க முடியாம கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டே இருக்கிறோம். ...ம் (பெரு மூச்சு விடுகிறாள்).

இலட்சுமி : ம் : வருத்தப்படாதே அம்மா, மன்னிச்சுக்கம்மா. நம்ம கஷ்டம் எல்லாம் தெரியாமே நான் ஏதோ கேட்டு விட்டேன் அழாதே அம்மா.

—திரை—

# காட்சி 3.

இடம் : லட்சுமி வீடு

நிலை ; (கமலம் இலட்சுமி வீட்டிற்கு வருகிறாள்)

கமலம் : இலட்சுமி! இலட்சுமி!

இலட்சுமி : யாரது கமலாவா! வாடி வா என்ன...

கமலம் : நாளைக்கு உல்லாசப்பயணம் போறதைப் பற்றி உன் அப்பாகிட்டே கேட்டு விட்டாயா?

வ. ஆ. மாவட்டம் முப்பது வேட்டி கிராமத்தில் நடந்த குடும்ப நலக் கூட்டத்தில் கலந்துகொண்டு, நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.



இலட்சுமி : இல்லடி நான் தான் போகலைன்னு சொல்லிட்டேன். பள்ளிக்கூடம் திறந்தவுடனே ரொம்ப செலவு இருக்கு. நான் தான் அப்பாவை கஷ்டப்படுத்த விரும்பவில்லை. மேலும் நான் மட்டும் போனா தம்பி, தங்கை எல்லாம் வருத்தப்படுவாங்க இல்லையா.

கமலம் : நீ உல்லாசப் பயணம் வராதது ரொம்ப வருத்தமாக இருக்கிறது. நான் டீச்சரிடம் 50 ரூபாய் கொடுத்துட்டேனே என்ன செய்றது. சரி இலட்சுமி நீ என்ன வேணும்னு கேளு! நான் உனக்கு வாங்கிட்டு வறேன்.

இலட்சுமி : ஏதாவது உன் இஷ்டப்படி வாங்கிட்டு வாடி...

(போஸ்ட் மேன் கடிதம் கொண்டு வந்து கொடுத்துச் செல்கிறார்.)

இலட்சுமி : என்னம்மா : இது லெட்டர்?

அம்மா : ஒன்னும் இல்லம்மா: உங்க அப்பா முதலாளிய சாயங்காலமா பார்த்தாராம். மாயவரத்திலிருந்து திருச்சிக்கு இன்னும் சரக்கு வரலையாம்: அதனாலே அப்பாவை உடனே அனுப்பி வைச்சுருக்காராம். வர 5 நாட்கள் ஆகுமாம். பாவம்: உன் அப்பா, இப்படியெல்லாம் ராத்திரி பகல்னு பாராம கஷ்டப்பட்டு தான் நாம் வயிறு வளக்க வேண்டியிருக்கு.

—திரை—

# காட்சி 4.

நேரம் : மாலை

இடம் : லட்சுமி வீடு

நிலை : (லட்சுமியின் தகப்பனார் வருகிறார். லட்சுமியின் தாய் அவரை விசாரிக்கிறார்)

அம்மா : என்னங்க! வீட்டிலேகூட சொல்லாம வெளியூர் போய்ட்டிங்க?

அப்பா : இங்க வா! சத்தம் போடாதே, உங்கிட்ட ஒன்னு ரகசியமா சொல்லனும்... (அருகில் செல்கிறாள்).

அம்மா : என்னங்க!

அப்பா : இங்க பாரு போன வாரம் நீ உன் மகக்கிட்ட பேசிட்டு இருந்ததையெல்லாம் நான் சன்னல் வழியாக் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். அன்னிக்கு உன் விருப்பப்படி குடும்ப நலத் திட்டத்தை ஏற்க சம்மதிக்கலை. அதன் விளைவு நம்ம குடும்பத்தையும் நம் மகளுடைய தோழி கமலத்துடைய குடும்பத்தையும் சேர்த்து பார்த்தாத்தான் தெரியும். இனி இன்னும் ஒரு குழந்தை உண்டாயிட்டா நம்ம கதி ரொம்ம மோசமாயிடும். பேரன் பேத்தி பிறக்கிற காலத்திலே நமக்கு குழந்தை பிறந்தா அவமானம் வேறே. இதையெல்லாம் தெரிஞ்சுதான் யாருக்கும் தெரியாமே நம்ம ஊர் ஆஸ்பத்திரியிலே நான் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்துகிட்டு வந்திருக்கேன். எனக்கு எந்த தொந்தரவும் இல்லை, சுகமா இருக்கிறேன்.

அம்மா : நீங்க ஏங்க செய்துகிட்டீங்க. நான் செய்திருக்க மாட்டேனா, எங்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா போதுமே (இலட்சுமி அங்கே வருகிறாள்).

இலட்சுமி : என்னங்கப்பா! மாயவரத்திலேயே இருந்திட்டீங்க. நல்லா இருக்கீங்களா? சாப்பிட்டீங்களாப்பா?

அப்பா : ஓ! சாப்பிட்டாச்சு இலட்சுமி, உனக்கும் உன் தம்பிகளுக்கும் உடுப்பெல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன். பார்த்தியாம்மா, அதோ இருக்கு பார் அந்த பொட்டலத்தை அவிழ்த்துப்பார். நான் பக்கத்து வீடு வரைக்கும் போயிட்டு வந்து விடுகிறேன்.

—திரை—

# காட்சி 5.

நேரம் : காலை

இடம் : இலட்சுமி வீடு

நிலை : (கமலம் இலட்சுமி வீட்டிற்கு வருகிறாள்)

கமலம் : இலட்சுமி! இலட்சுமி!

இலட்சுமி : யாரது கமலாவா? என்னடி.. உல்லாசப் பயணமெல்லாம் எப்படி இருந்தது, ரொம்ப நல்லாயிருந்ததா?

கமலம் : ரொம்ப நல்லா இருந்தது. நீ வராதது தான் எனக்கு ரொம்ப கவலை. இலட்சுமி உனக்கு கல்யாணம் நடந்ததும் முதலில் திருச்செந்தூர் முருகனைப் போய் பாரு. கன்னியாகுமரியையும் போய் பாரு. அட பார்த்தியா மறந்துட்டேன். உனக்கு ஒரு பரிசு வாங்கிட்டு வந்திருக்கேன். அது உன் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற பரிசு.

(பரிசை எடுத்து கமலம் காண்பிக்கிறாள்)

இலட்சுமி : என்ன! என்னடி அது! சீக்கிரம் காட்டுடி ஆகா! என்ன அழகான பொம்மை. ஒரு மகிழ்ச்சியான திட்ட மிட்ட குடும்பத்தையல்லவா இது காண்பிக்கிறது. மகிழ்ச்சியான ஒரு அண்ணன், ஒரு சிறிய தங்கை, ஒன்றுபட்ட அப்பா, அம்மா.

கமலம் : எங்க குடும்பம் இப்படி இருப்பதால் தான் நாங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். அதுபடியே எல்லா குடும்பமும் அளவோட இருந்துட்டா யாருக்கும் கஷ்டமும் இருக்காது, கவலையும் இருக்காது. இலட்சுமி நீ உங்க அப்பா, அம்மா மாதிரி கஷ்டப்படாமல் இந்த பொம்மை குடும்பத்தை பார்த்து நீயும் மகிழ்ச்சியான குடும்பமாக வாழனும். அதுக்குத்தான் இதை வாங்கிட்டு வந்தேன். (இலட்சுமியின் தாயார் வருகிறாள்).

அம்மா : என்ன கமலம் எப்ப வந்தே? அப்பா, அம்மா சுகமா இருக்காங்களா?

கமலம் : நல்ல சுகந்தாங்கமா! (இலட்சுமியின் அப்பா வருகிறார்)

இலட்சுமி : அப்பா! அப்பா! கமலம் எனக்கு ஒரு அழகான பொம்மை வாங்கிட்டு வந்திருக்கா, பார்த்திங்களா? எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. இதை பாருங்களேன்.

(பொம்மையை எடுத்துக் காட்டுகிறாள்)

அப்பா : அட டே...... அழகா இருக்கிறதே...... நம் நாட்டிலே ஒவ்வொருவருடைய வீட்டிலேயும் இருக்க வேண்டிய பொம்மை இது. காந்தி தாத்தா நமக்குத் தந்த குரங்கு பொம்மை மாதிரி கருத்து நிறைந்த பொம்மை. இந்த மாதிரி கருத்து நிறைந்த பொம்மையை ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருந்தால்தான் சிறிய குடும்பம் சிரஞ்சீவி குடும்பம்னு ஞாபகம் இருந்திட்டே இருக்கும்!

அம்மா : கமலம் உனக்கு இவ்வளவு அறிவு எப்படியம்மா வந்தது. எங்களுக்கே இப்பதான் அறிவு வந்தது. ஆனால் எங்க மகள் இலட்சுமி நீலகிரி மாப்பிள்ளையோட அளவோடு பெற்று வளமாக வாழ்ந்து சிரஞ்சீவியா குடும்பம் நடத்துவா!

—முற்றும்—

[இந்நாடகம் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து கிராமிய நிகழ்ச்சியிலும், பூவையர் பூங்கா நிகழ்ச்சியிலும் இருமுறை ஒலி பரப்பப்பட்டது. நிலையத்தாருக்கு நன்றி.]




## காட்சி 16.

இடம் : கனகலிங்கம் வீடு.

இருப்போர் : உமா, பூஞ்சோலை.

[சோகமான பாடல் ஒன்றை உமா பாடுகிறாள். தேம்புகிறாள். கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது. உள்ளே யாரோ வருவதை உணர்ந்து, கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். பூக்குடலையோடு பூச்சோலை உள்ளே வருகிறாள்.]

பூஞ் : என்னா உமா, மல்லி வேணுமா முல்லை வேணுமா? அடடே என்ன முகமெலாம் வாடியிருக்கு ? அழுதாப்பலே இருக்குது ! என்ன உமா, பேசாமே இருக்கிறே ?

உமா : ஒன்னுமில்லை பூஞ்சோலை—ஏதோ, என் தலை எழுத்தெ நினைச்சேன், அழுகை வந்திடிச்சி !

பூஞ் : உங்க அம்மாவெ நினைச்சிக்கிட்டையா...... அய்யோ பாவம் ! உன் கல்யாணத்தெ பாக்க அவங்களுக்குக் கொடுத்து வைக்கலே ! ..............

உமா : என்னெ பத்தி இருக்கட்டும் பூஞ்சோலை—உன் சங்கதி என்னாச்சி ! வாத்தியாரு மகனெ விரட்டிக்கிட்டே இருந்தையே !

பூஞ் : அவர உனக்குத் தெரியுமா, உமா ?

உமா : என்ன அப்படி கேட்கறே—நம்ம வாத்தியார் மகன் பஞ்சவர்ணத்தெ, ஊரிலே யாருக்குத்தான் தெரியாது ! இந்த ஊர் பள்ளிக்கூடத்திலே எங்க அத்தான் படிக்கச்சே, இந்தப் பஞ்சவர்ணமும் அவரோடத்தான் படிச்சாரு ! ரெண்டு பேரும் ஒன்னாக எங்க வீட்டுக்கு அடிக்கடி வருவாங்க !

பூஞ் : அப்படியா? என்னா பொருத்தம் பாரு ! நீயும் நானும் சின்ன வயசிலே ஒன்னா படிச்சோம்—அவங்க ரெண்டு பேரும் ஒன்னா படிச்சவங்க !

உமா : உன் சங்கதி என்னாச்சியின்னு கேட்டனே !

பூஞ் : அரை பைத்தியமா இருந்தவரெ—முழு மனிதனாக்கிட்டேன் ! அடுத்த மாசம்.. .........

உமா : அட என்னமோ வெட்கப்படறையே, கல்யாணமா ?

பூஞ் : ஆமாம் உமா, அடுத்த மாசம் எங்க கல்யாணம் நடக்கப் போகுது !

உமா : என் வாழ்த்துக்கள் !

பூஞ் : கெட்டிக்காரிதான் நீ—இப்பவே வாழ்த்துச் சொல்லிடறையே? கல்யாணத்திலே வந்து சொல்லு !

உமா : (சோகமாக) உன் கல்யாணம் வரை, நான் இருப்பனோ—இருக்க மாட்டனோ !

பூஞ் : (தயக்கத்தோடு) உமா, நீ என்ன சொல்றே?

உமா : என்னைப் பத்தி நீ கேள்விப்பட்டே இல்லையா ?

பூஞ் : எனக்கு ஒன்னுமே தெரியாதெ !

உமா : எனக்கு எங்க அப்பா பட்டணத்திலே மாப்பிள்ளை பார்த்திருக்காரு !

பூஞ் : இதென்ன கூத்து ? முறை மாப்பிள்ளெ இருக்கச்சே—வேறு மாப்பிள்ளையா ?......... அதுக்குதான் உட்கார்ந்து அழுதுகிட்டிருக்கறையா ?

உமா : வீட்டை விட்டு வெளியே எங்கேயும் நான் போகக் கூடாதாம்—அப்பா உத்தரவு ! கட்டுக்காவல் எல்லாம் இப்போது எனக்கு அதிகம் ! ஜன்னல் ஓரமா நின்னாகூட, ஏன் அங்கே நிக்கறேன்னு, அப்பா அதட்டுறாரு !

பூஞ் : (அலட்சியமாக) பூ, இவ்வளவுதானா ? இதுக்கா இப்படி நீ ஒடிஞ்சி போயி உட்கார்ந்து கிட்டிருக்கிறே ? அப்பா சொல்றாராம்—இவ பயந்து நடுங்கறாளாம் ! நளாயினி காலமில்லே இது—நாகரீகமான காலம் ! அத்தானைத்தான் கட்டிக்கோவேன்—வேற ஒருத்தனையும் கட்டிக்க மாட்டேன்னு தைரியமா சொல்ல வேண்டியது தானே ! என்னா பயம் ? மனசெ தளர விடாதே ! நான் இருக்கேன், தைரியமா இரு ! சாந்திரத்திலே மட்டுமில்லே, இனிமே காலையிலும் உங்க வூட்டுக்கு நான் வர்ரேன்— நடக்கிறதெ பாரு !

[கனகலிங்கம் உள்ளே வருகிறார்]

கனக : என்னா பூஞ்சோலை—ஏதோ தைரியம் சொல்றாப்பலே இருக்கே ?

பூஞ் : (திடுக்கிட்டு) தைரியமா ? எனக்கே அது கிடையாது—நான் எங்கிருந்து மத்தவங்களுக்குத் தைரியம் சொல்லப் போறங்க ?......... உமா, முல்லெ தானே கேட்டே ? இந்தா இரண்டு முழம் !

[பூவைக் கொடுத்து விட்டுப் பூஞ்சோலை செல்கிறாள். கனகலிங்கம் மகளைத் திரும்பிப் பார்க்க, அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறாள்.]

—காட்சி முடிகிறது—

## காட்சி 17.

இடம் : ஊரின் ஒருபுறம்.

இருப்போர் : பன்னீர், பஞ்சவர்ணம்.

[வானத்தை விரக்தியோடு பார்த்துக் கொண்டு நிற்கும் பன்னீருக்கு, பஞ்சவர்ணம் ஆறுதல் கூறுகிறான்.]

பஞ் : பன்னீர் ! மனசெ தளர விடாதே ! யோசிப்போம் ! வழி தெரியாமலா போகும் !

பன் : ஒரு வாரமா யோசித்துக் கிட்டுத்தான் இருக்கிறோம் ! என்ன செய்யறதுன்னு தோணலையே ! உமா அங்கே புழுவா துடிச்சிக்கிட்டிருக்கிறா—புரியாமே நாம குழம்பிக்கிட்டிருக்கிறோம் !

பஞ் : நான் உன்னெ பார்த்துப் பேசினா—நீ என்னடாயின்னா, வானத்தெப் பாத்துப் பேசிக்கினுருக்கிறையே ?

பன் : மேகம் சூழ்ந்த வானத்தின் அமைதியிலே, ஏதேனும் நம்பிக்கை ஒளி தெரியுதா இன்னு, என் கண்ணும் மனமும் தேடுது !

பஞ் : என்ன, தத்துவம் பேசறையா ?

பன் : விரக்தி கொண்ட மனிதனின் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் எல்லாமே, தத்துவங்கள்தான் !

பஞ் : (பயந்து விழித்துப் பார்த்தவாறு) பன்னீர் !

பன் : பயப்படாதே, பஞ்சவர்ணம் ! எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கலே ! உமா வீட்டிற்குள்ளேயே சிறை வைக்கப்பட்டிருக்கிறாள் ! பணத்தின் போதையில் தலைகால் தெரியாமல் ஆடுகிறார், என் மாமா ! எவ்வளவுக்கு எவ்வளவு மனம் கொடூரமாக இருக்கிறதோ—அவ்வளவுக்கு அவ்வளவு வாழ்க்கை சுகப்படுமின்னு, நம்பிக்கிட்டிருக்கிறார் ! இந்த ஒரு வாரக் காலத்தில் நான் பார்த்ததெல்லாம், கேட்கிறதெல்லாம் பயங்கரம் ! திகில் ! திகைப்பு ! உமா அங்கே கண்ணீர் வடிக்கிறா—அழுது துடிக்கிறா ! என் இரத்தம் கொதிக்குது—மனம் துடிக்கிறது ! எதையாவது செய்யனும்—செய்து ஆகனும் !

பஞ் : என்ன செய்யப்போறே—அதையாச்சும் சொல்லேன் !

பன் : என்ன செய்யறதின்னு புரிஞ்சா—சொல்லிக்கிட்டா இருப்பேன்—செய்து முடிச்சிட்டு இருப்பனே !....

(சிறிது யோசித்து விட்டு)

...........அப்படி செய்தா என்ன ?........... அப்படிச் செய்திட்டன்னா, எங்கள் வாழ்க்கையில் குலை நடுக்கம் இருக்காது ! கூக்குரல் கேட்காது—கேட்காது—கேட்கவே கேட்காது !

பஞ் : என்ன செய்யப் போறே பன்னீர்—சொல்லு !

பன் : என் மாமனெ ..............

[ஆத்திரத்தில் அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை !]

பஞ் : பல்லைக் கடிக்காதே ! கேட்கிறதுக்குப் பதில் சொல்லு ! உன் மாமனை என்ன செய்யப் போறே ?

பன் : (உறுதியான குரலில்) கொலை செய்யப் போறேன் !

பஞ் : அடபாவி, கொலை செய்யப் போறையா ? கொலை செய்தா, உன்னெ சும்மா விட்டு விடுவாங்களா ? தூக்கு மரத்திலே தொங்க விடுவாங்க !

பன் : தூக்குக்கு நான் அஞ்சலே—சாவுக்கு நான் பயப்படலே !

பஞ் : நீ தயாராகத்தான் இருப்பே, உன் உமாவின் கதி என்ன ஆகறது ? அதெ நினைச்சுப் பார்த்தையா ?

பன் : பஞ்சவர்ணம்—என்னை ஏண்டா குழப்பற ?

பஞ் : இன்னொன்றையும் கேளு ! நீ கொலைகாரனாமாறினா, உமா உன்னைப் புகழ்ந்து பாராட்ட மாட்டா—வெறுத்து ஒதுக்கிடுவா ! எந்த மகளும், தன் அப்பன் துடிதுடிச்சிச் சாகிறதெ தாங்கிக்க மாட்டா !

பன் : (வெறுப்போடு) அப்பனா அவரு ? எந்த அப்பனாவது மகன் ஏங்கித் தவிக்கிறதெ, எக்காளமா பார்ப்பானா ? ஏளனமா பேசுவானா ? அவளெ கதறியழச் செய்திட்டு, இவன் கெக்கலி கொட்டிச் சிரிப்பானா ? என் மாமனெ துண்டுதுண்டா வெட்டிப் போட்டாக்கூட, என் ஆத்திரம் தீராது !

பஞ் : கையாலே செய்ய முடியாததெ—வாயாலேயாவது பேசி, ஆசெ தீர்த்துக்கோ ! அட பைத்தியக்காரா ! உன் மாமனெ நேருக்கு நேர் பார்த்து, எதிர்த்துப் பேசவே உனக்குத் தைரியம் வரலே ! துண்டு துண்டாக வெட்டிப் போடப் போறானாம்—சூராதி சூரன் !...... ஏதாவது உருப்படியா செய்யப் பாரு !...... டே பன்னீர்........... எனக்கு ஒரு யோசனை........... ஆமாம் ! அவர் நடுங்குறாப்பலே நீ ஏதாவது செய்யனும், அப்போதான் உன்னால் காரியத்தெ சாதிக்க முடியும் !

பன் : அவர் நடுங்கறாப்பலே ?

(யோசிக்கிறான்.)

நலல யோசனை சொல்லிட்டே, ஆமாம் அப்படித்தான் செய்யப்போறேன் !

பஞ் : அவரெ நடுங்கறாப்பலே செய்யப் போறையா ?

பன் : அது என்னாலே முடியாது !

பஞ் : நான் எதிர் பார்த்ததுதான் !

பன் : ஆமாம் பஞ்சவர்ணம்—நீ எதிர் பார்க்காதது எல்லாம் இனிமேதான் நடக்கப் போகுது ! கனகலிங்கத்தை அழச் செய்யப் போறோம் ! அலறச் செய்யப் போறோம் ! என்னாலேயும் உமா வாலேயும், அதைச் செய்ய முடியும் ! அப்படித்தான் செய்யப் போறோம் ! வாழ்வு இல்லே—ஒளி இல்லேன்னு தெரிஞ்சி போச்சி ! நிச்சயமா தெரிஞ்சி போச்சி ! ஒளி இல்லேன்னா, இருள்தானே ? அந்த இருளிலே பாய வேண்டியது தான் ! இருள் ! இருள் ! எங்கும் இருள் !

[இவ்வாறு ஆவேசத்தோடு சொல்லிக் கொண்டே, பன்னீர் அங்கிருந்து ஓடுகிறான்.]

பஞ் : பன்னீர் ! பன்னீர் ! பொறுடா பொறு ! இன்னொரு யோசனை ! நல்ல யோசனெ ! இதைக் கேளுடா !

[நண்பனைத் தொடர்ந்து பஞ்சவர்ணம் ஓடுகிறான்.]

—காட்சி முடிகிறது—

(வளரும்)

159885

# 1978 ஆண்டு சிறார் திருமணத் தடுப்பு (திருத்த) சட்டம்

1929-ஆம் ஆண்டு சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கும் அதன் விளைவாக 1872-ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டத்திலும் 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்வதற்குமான ஒரு சட்டம் :

இந்தியக் குடியரசின் இருபத்தொன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்ட மியற்றப் படுவதாக :-

1. சிறுதலைப்பும் தொடக்கமும் :-

(1) இச்சட்டம், 1978 ஆம் ஆண்டு சிறார் திருமணத் தடுப்பு (திருத்த) சட்டம் என்று அழைக்கப்படும். (2) மத்திய அரசு, அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு நியமிக்கக் கூடிய நாளன்று இது செயலுக்கு வரும்.

2. 1929-ஆம் ஆண்டு 19-வது சட்டத்தின் 2 ஆவது பிரிவில் திருத்தம் :

1929 ஆம் ஆண்டு சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தில் (இப்பால் இது மூலச் சட்டம் என அழைக்கப்படும்.) 2 ஆவது பிரிவில், (a) பகுதிக்குப் பதிலாக, கீழ்க்கண்ட பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது :-

''(a) சிறார் என்பது, ஆணாய் இருந்தால் இருபத்தோரு வயது நிரம்பாத ஒருவர் என்றும், பெண்ணாய் இருந்தால் பதினெட்டு வயது நிரம்பாத ஒருவர் என்று பொருள் படும்''.

3. புதிய பிரிவு 7 ஐச் சேர்த்துக் கொள்ளுதல் :-

மூலச் சட்டத்தின் 6 ஆவது பிரிவுக்குப் பின்னர், கீழ்க்கண்ட பிரிவு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது :-

''சில செயல் நோக்கங்களுக்காக, குற்றங்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்களாகக் கருதப்பட வேண்டும்'' என்பது.

இச்சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள நோக்கங்களாக பிடியாணை வேண்டாக்
3 குற்றங்களாக இருப்பது போலவே கருதப்பட்டு அவற்றிற்கு 1973-ஆம் ஆண்டு கி. பு. கோ. (2/1974) பொருந்தும்.

(a) அத்தகைய குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்காகவும்.

(b) (I) அந்த விதிக் கோவையின் 42 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவை; மற்றும் (2) பிடி ஆணை இல்லாமல் அல்லது மாஜிஸ்ட்ரேட்டின் ஆணை இல்லாமல் ஒரு நபரைக் கைது செய்வது தவிர்த்த பிற காரியங்களுக்காகவும்.

4. 8-ஆவது பிரிவில் திருத்தம் :-

மூலச்சட்டத்தின் '8ஆவது பிரிவில், (a) 1898-ஆம் வருஷத்து 'கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்' என்னும் சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாக, ''1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக் கோவை'' என்னும் சொற்களும் இலக்கங்களும் அமைத்துக் கொள்ளப்படவேண்டும் ;

(b) ''ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பெருநகர மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்'' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.

5. 10 ஆவது பிரிவில் திருத்தம் :

மூலச்சட்டத்தின் 10-ஆவது பிரிவில், ''1898-ம் வருஷத்து கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவை'' என்னும் சொற்களும் இலக்கங்களும் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.

6. சில திருத்தங்களுக்கும் திருத்தம் :-

விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், அதில் குறிப்பிட்டவாறு இதனால் திருத்தப் படுகின்றன :-



கன்னியாகுமரி மாவட்டம் திங்கள் சந்தையில் நடந்த குடும்ப நல காலாண்டு நிறைவு விழாக் கூட்டத்தில். குளச்சல் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஆர். ஆதிசாமி தலைமையுரை ஆற்றுகிறார். மாவட்ட மக்கள் கல்வி மற்றும் செய்தி அலுவலர் (பொறுப்பு) திரு. நாகூர் மீரான், முட்டம் ஆதார நல நிலைய மருத்துவர் டாக்டர் ஜேம்ஸ் லெஸ்லி ஆகியோர் அருகில் உள்ளனர்.

## விவர அட்டவணை

| ஆண்டு (1) | எண் (2) | சிறுதலைப்பு (3) | திருத்தம் (4) |
|---|---|---|---|
| 1872 | 15 | 1872-ஆம் ஆண்டு இந்திய கிறித்துவத் திருமணச் சட்டம். | திருத்தம் (4) 60 ஆவது பிரிவில் (1) நிபந்தனை எண் (1)-ல், ''பதினெட்டு ஆண்டுகள்'' ''பதினைந்து ஆண்டுகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே இருபத்தோரு ஆண்டுகள், ''பதினெட்டு ஆண்டுகள்'' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.<br>(2) வரம்பு நிபந்தனை விட்டு விடப்படவேண்டும். |
| 1955 | 25 | 1955-ஆம் ஆண்டு இந்து திருமணச்சட்டம். | (1) 5-ஆவது பிரிவில்—<br>(1) பகுதி (iii)-ல், ''பதினெட்டு ஆண்டுகள்'' ''பதினைந்து ஆண்டுகள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே ''இருபத்தோரு ஆண்டுகள்'' ''பதினெட்டு ஆண்டுகள்'' என்னும் சொற்கள் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்.<br>(ii) பகுதி (vi) விட்டு விடப்படவேண்டும்.<br>(2) 6-வது பிரிவு விட்டு விடப்படவேண்டும்.<br>(3) 12 ஆவது பிரிவு. (1) உட்பிரிவைச் சேர்ந்த பகுதி (C)-ல்<br>''5 ஆவது பிரிவில் சொல்லியுள்ளவாறு'' என்னும் சொற்களுக்கும் இலக்கத்திற்கும் பதிலாக. ''1978-ஆம் ஆண்டு சிறார் திருமணத் தடுப்பு (திருத்த) சட்டம் செயலுக்கு வரத் தொடங்கிய நாளுக்கு நேர் முன்னதாக உள்ளவாறு ''5-ஆம் பிரிவில் சொல்லியிருந்தபடி'' என்னும் சொற்களும் இலக்கங்களும் அடைப்புக் குறிகளும் அமைத்துக் கொள்ளப்படவேண்டும்''.<br>(4) 18 ஆவது பிரிவில்<br>(1) ''(v) மற்றும் (vi)'' என்ற அடைப்புகளுக்கும் எழுத்துக்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக, ''மற்றும் (v) என்ற சொல்லையும் அடைப்புகளையும் எழுத்தையும் அமைத்துக் கொள்ளவேண்டும்''.<br>(ii) பகுதி (b)-ல், இறுதியில் வரும் ''மற்றும்'' என்னும் சொல் விட்டு விடப்படவேண்டும்.<br>(iii) பகுதி (c) விட்டு விடப்படவேண்டும். |

## அறிவிப்பு

புதுடெல்லி, 20-9-78 562 ( ) :-

1978-ம் ஆண்டு சிறார் விவாகத் தடுப்பு (திருத்தச்) சட்டத்தின் (2/1978)

1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு மேற் சொன்ன சட்டம் 1-10-78 அன்று செயலுக்கு வரும் என இதனால் குறிப்பிடுகிறது.

800 009
157885

# குழந்தைகள் அதிகமானால் அன்பும், பாசமும் குறையும்!

## சங்கரன் கோயில் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் உரை!

சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் சுவாமி சந்நிதி மண்டபத்தின் முன்பு திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் குடும்பநல இருவார நிறைவு விழா நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. எஸ். செல்வராஜ், அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தனது தலைமையுரையில், ''மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப் படா விட்டால் நம் நாட்டின் எதிர் காலம் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாவது திண்ணம். முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அனைத்துப் பொருட்களின் விலைவாசிகள் ஆறேழு மடங்குகள் அதிகரித்து விட்டன. நாட்டின் பொருளாதாரம் சாண் ஏறினால் மக்கள் தொகையின் பெருக்கத்தின் விளைவாக முழம் சறுக்கிக் கொண்டிருக்கிறது. எனவே மக்கள் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். குடும்பத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகம் ஆகஆக அவர்கள் பால் பெற்றோருக்கு அன்பும் பாசமும் குறைந்து விடுகிறது. அதே போல் குழந்தைகளுக்குப் பெற்றோர்களிடம் மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விடுகிறது. அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம் என்பதை உணர்ந்து தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அறுவை சிகிச்சை சுலபமானது. அதனால் எந்த வித கேடுமில்லை என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

எனவே இந்தத் திட்டம் பற்றி அனைவரும் தைரியமாக நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எடுத்துக்கூறி அவர்களும் இந்தத்திட்டத்தின் பயனைப் பெற்று மகிழ ஆவன செய்யவேண்டும். அதுவே இந்த விழாவின் லட்சியம்''. என்று எடுத்துரைத்தார்.

வாசுதேவ நல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணன் தனது சிறப்புரையில், ''குடும்ப நலத் திட்டம் இயற்கைக்கு மாறானது என்று சில அஞ்ஞான வாதிகள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நதியின் இயற்கையான போக்கை தடை செய்து அணை கட்டிய பின்பு தான் அதன் மூலம் நாம் ஆயிரம் ஆயிரம் நன்மைகள் அடைகிறோம். அதை மறிப்பது பாவம் என்று விட்டு விட்டால் வற்றாத ஜீவ நதிகள் நாட்டில் ஓடுவது ஏது? ''என்று குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினருக்குப் பின் மாவட்ட உடல்நல அலுவலர் டாக்டர் கோஸ். சங்கர நாராயணன் மத்திய அரசு விளம்பர அதிகாரி திரு. என். ரங்கநாதன், சங்கரன் கோவில் நகராட்சி ஆணையாளர் திரு. ஏ. சுந்தரராகவன், திரு. எம். நாகூர் மஸ்தான் முதலானோர் திட்டம் பற்றி தெளிவான கருத்துக்கள் வழங்கினர்.

விழாவில் மாவட்ட மக்கள் கல்விச் செய்தி மற்றும் தகவல் அலுவலர் எஸ். நாகூர் மீரான் வரவேற்புரை நிகழ்த்த மாவட்ட குடும்ப நலப் போதகர் திரு. ஏ. முருகேசன் நன்றி நவின்றார்.

# சென்னை மங்களபுரத்தில் விழா!

சென்னை சேத்துப்பட்டு மங்கள புரத்தில் கில்ட் ஆப் சர்வீஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் குடும்ப நல நிலையமும், சென்னை மாவட்ட குடும்ப நலத் துறையும் இணைந்து குடும்ப நலப் புத்தறிவுப் பயிற்சி முகாமை 3.10.79 அன்று மங்களபுரத்தில் நடத்தினர். விழாவிற்கு கில்ட் ஆப் சர்வீஸ் நிறுவனத்தைச் சார்ந்த செல்வி ஆறுமுகம் தலைமை தாங்கினார். தமிழ் நாடு அரசு கைத்தறித் துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் துவக்கி வைத்தார். மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு. எஸ். அப்பர் சுந்தரம் அனைவரையும் வரவேற்றார்.

அன்று மாலை பயிற்சியாளர்களுக்கு, குடும்ப நல விளம்பரத் துறை துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன் சான்றிதழ்களை அளித்தார்.

புத்தறிவுப் பயிற்சி முகாம் நடந்த அன்றே சிறு குடும்ப நல முகாமும் நடந்தது. அன்று 4 தந்தைமார்களுக்கு அறுவை சிகிச்சையும், 5 தாய்மார்களுக்கு 'லூப்' பொருத்துதலும் நடைபெற்றது. 14 பேர்களுக்கு கருத்தடை மாத்திரைகள் வழங்கப்பட்டன. 36 குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகளும், 36 குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்தும் தரப்பட்டது. 171 தாய்மார்களுக்கும், 398 குழந்தைகளுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

# சிவலிங்கபுரத்தில் பயிற்சி முகாம்

சென்னை மாவட்ட குடும்ப நலத் துறையும், இந்திய குடும்ப நலத் திட்ட சென்னை கிளையும் இணைந்து சென்னை கலைஞர் கருணாநிதி நகர் சிவலிங்கபுரத்தில் கருத்துக்களை உருவாக்கும் தலைவர்களுக்கான குடும்ப நலப் புத்தறிவு முகாமை 28.10.79 அன்று நடத்தினார்கள்.

விழாவிற்கு முதலமைச்சரின் பேரவைச் செயலாளர் மாண்புமிகு எஸ். எம். துரைராஜ் அவர்கள் தலைமை தாங்க, தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் துவக்கி வைத்தார்.

விழாவில் குடும்ப நல விளம்பரத் துறை துணை இயக்குநர் வெ. நாமதேவன், முன்னாள் வானொலி நிலைய இயக்குநரும் இந்நாள் மக்கள் தொகையியல் கல்வி தலைவருமான திரு. எஸ். வி. நடராஜன், இந்திய குடும்ப நலத் திட்ட சென்னைக் கிளையின் கௌரவச் செயலாளர் திருமதி ருக்மணி மணி ஆகியோர் பேசினர்.

துவக்கத்தில் மக்கள் கல்வி தகவல் அலுவலர் திரு. அப்பர் சுந்தரம் அனைவரையும் வரவேற்று, முகாமின் நோக்கங்களை எடுத்துக் கூறினார். இறுதியாக இந்திய குடும்ப நலத் திட்ட சென்னைக் கிளையின் அமைப்புச் செயலாளர் திருமதி கிரிஜா சுவாமிநாதன் நன்றி கூறினார். முகாமைத் தொடர்ந்து குடும்ப நலக் கண்காட்சியும் நடைபெற்றது.

Printed and Published by Dr. ERNEST J. DAVID, M.B.B.S., Director of Medical Services and Family Welfare at No. 49, Pantheon Road, Madras 600 008 — State Family Welfare Press, 79/81, Anna Salai, Madras-600006
Editor: K. G. RADHAMANALAN Assistant Editor: S. MUTHURAMALINGAM





1. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஊராட்சியை சேர்ந்த சிலாவட்டம் கிராமத்தில் நடைபெற்ற "செல்வோம் கிராமத்திற்கு" நிகழ்ச்சியின் போது, மாதர் சங்க உறுப் பினர் சந்தேக விளக்கம் கேட்கிறார்.
2. சிட்லபாக்கம் ஊராட்சி ஒன்றியம் அனகாபுத்தூரில் பட காட்சி.
3. குன்றத்தூர் ஒன்றியம் மணிமங்கலம் கிராமத்தில் நடந்த குழு விவாதத்தில் பங்கேற்ற தாய்மார்கள்.
4. சிலா வட்டம் கிராமத்தில் ஊராட்சித் தலைவர் குடும்ப நலம் பற்றிய தம் கருத்தைத் தெரிவிக்கிறார்.
5. கம்மாளம்பூண்டி கிராமத்தில் குழு விவாதத்தில் கலந்து கொண்ட ஆண்களில் ஒரு பகுதியினர்.

Registered No. RN 28061/71
Registered No. TN/MS-C/130

# These are my two sons!

**Mrs. Kantamma of Kanigiri proudly says her two daughters have proved themselves so capable— they're as good as sons to her!**

## A DAUGHTER IS AS GOOD AS A SON

A male child has always been preferred for various reasons in societies like ours. But, the circumstances have since changed with the rise in the status of woman due to spread of female education and employment. With the joint family system fast breaking up, economic and social dependence on sons alone for old age secu longer holds that Affinity and loyalty of a daughter towards her parents is being equally valued. It is now increasingly realised that a daughter is as good as a son. She has proved herself equal to the task whenever a situation so demanded.